# GST ROAD NEWS

## TAMBARAM

Email:gstroadnews@gmail.com | Weekly News Paper | www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:13 Issue - 28 26 Oct 2025 - 01 Nov 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902


## தங்கம் விலை கிராமுக்கு 100 உயர்வு

தங்கம் கிராமுக்கு ரூ.100 அதிகரித்து ஒரு கிராம் ரூ.11,500க்கு விற்பனையாகிறது. பவுனுக்கு ரூ.800 அதிகரித்து ஒரு பவுன் ரூ.92,000க்கு விற்பனையாகிறது.தங்கத்தின் மீதான முதலீடு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியதன் விளைவாக அதன் விலை உயர்வதாக நகை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்

GATED COMMUNITY PLOTS FOR SALE @ URAPAKKAM IYYENCHERY 1.5 km. FROM KILLAMBAKKAM BUS STAND

98400 34209

INDEPENDENT DUPLEX VILLA FOR SALE



@ URAPAKKAM IYYENCHERY-1.5 KM FROM KILLAMBAKKAM BUS STAND


3 BHK - 2119 Sqft

LAND - 1011 Sqft

CCP,AS PER VASTHU

98400 34209

2 & 3 BHK PREMIUM APARTMENTS



READY TO MOVE Dec 2025

HASTHINAPURAM - KRISHNA NAGAR NEAR RAM GANESH MAHAL, RP MAIN ROAD

3 BHK - 1153 Sqft 1st FLOOR ROAD FACING

2 BHK - 900 Sqft 2nd & 3rd FLOORS

CRAFTED FOR COMFORTABLE LIVING

EV CHARGING ACCESS | EASY LOAN PROCESSING

CCP | LIFT | CCTV | VASTU

HASA HOMES

90032 95270

FLATS FOR SALE @ CHROMPET

HASTHINAPURAM BUS STAND OPP NR VIVEKANANDHA NSN SCHOOLS



AVAILABLE 2BHK 901-921 Sqft

AMENITIES

- CCP
- LIFT
- CCTV
- AS PER VASTHU
- LOAN ARRANGED
- INDIVIDUAL WATER TANK

ANUJ HOMES 81481 11101,94446 54776

PAAVAYEE BUILDERS

Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial



NEW PROJECT FLATS @ CHROMPET JESUPATHAM ST, RADHA NAGAR

LUXURIOUS-3 BHK

CUSTOMISATION AVAILABLE

✓ Lift ✓ CCP ✓ CCTV ✓ Metro Water ✓ Video Door

NO WATER LOGGING

Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.

98410 69244 / 98408 66223

FLATS FOR SALE @ HASTHINAPURAM



2 UNITS ONLY AVAILABLE

3 BHK LUXURY APARTMENT

READY TO OCCUPY

₹99L (ALL INCLUSIVE)

Free Modular kitchen

☑ Lift ☑ CCTV ☑ CCP ☑ As Per Vastu

DECCAN CONSTRUCTION

2nd Main Road, Venkatraman Nagar, Hasthinapuram, Chennai - 64.

9841659939 / 9841319996

IND. VILLA FOR SALE @CHROMPET, THIRUMALAI NAGAR

Nr.PONNIYAMMAN KOVIL MAYILAI RAMAMURTHY ST



3 BHK

LAND AREA - 1200 sqft

BUILD UP AREA 1900 sqft

☑ 24 Hrs Water ☑ As per vasthu ☑ 100% Red Bricks

PREMIUM FLATS FOR SALE @ CHROMPET

THIRUMALAI NAGAR, Nr. Zion School

READY TO MOVE



2 BHK -980 Sqft

3 BHK-1240 Sqft

Rs.72L (ALL INCLUSIVE)

☑ Lift ☑ CCP ☑ CCTV ☑ As Per Vasthu

GJ CONSTRUCTION

98409 41585

FLATS FOR SALE @ CHROMPET

Nr.HASTHINAPURAM BUS STAND



ELANGOVAN STREET

READY TO OCCUPY

3 BHK - 1100 sqft 2nd Floor

✓CCP ✓As Per Vasthu ✓Loan Arranged

9790878747 / 6383495715

FLATS FOR SALE @ CHROMPET THIRUMALAI NAGAR

NISHAN APARTMENT



5th STREET NR. ZION SCHOOL

2 BHK 960 Sqft

3 BHK 1200 Sqft

LIFT/CCP/CCTV/ VIDEO DOOR PHONE AS PER VAASTHU / 24 HRS WATER

NISHAN CONSTRUCTION 98409 84126

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

PADMANABHA NAGAR Nr. KARUMARI AMMAN TEMPLE

NEW Projects



24 HRS POWER BACKUP*

4 BHK - 1825 Sqft

2 BHK - 941 & 898 Sqft

KRISHNA NAGAR Nr. HASTHINAPURAM BUS STAND

READY TO MOVE



24 HRS POWER BACKUP*

3 BHK - 1287 Sqft

BASHYAM NAGAR Nr. ABIRAMI KALYANA MANDABAM

NEW Projects



24 HRS POWER BACKUP*

3 BHK - 1132 Sqft

2 BHK - 1028 Sqft

Specification: With Lift | As Per Vaasthu | CCP | CCTV | Videodoor Phone | Red Bricks Construction

Sankar Constructions 98416 59929 / 98416 59930

Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD | HDFC BANK | SBI

# சூரசம்ஹாரம்: திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் திருவிழா கதை

சூரசம்ஹாரம் என்பது கந்த சஷ்டி விரதத்தின் (நாளை) இறுதி நாளாகும். முருகப்பெருமான் சூரபத்மனை தனது 'வேலால்' வதம் செய்ததை கொண்டாடும் விதமாக சூரசம்ஹாரம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில், தீமையை நன்மை வென்றதையும் தர்மத்தை மீட்டெடுப்பதையும் பக்தர்கள் கொண்டாடுகிறார்கள். மறுநாள் திருகல்யாணம் என்று அனுசரிக்கப்படுகிறது. முருகனுக்கும் தேவசேனாவுக்கும் இடையிலான தெய்வீக திருமணம்.

### சூரசம்ஹாரக் கதை

ஸ்கந்த புராணத்தின் படி, சூரபத்மன், சிங்கமுகன் மற்றும் தாரகாசுரன் தலைமையிலான அசுரர்கள் தேவர்களை தோற்கடித்து பூமியைக் கைப்பற்றினர். அவர்கள் மனிதர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர், அதர்மம் எங்கும் பரவியது. பிரம்மா, தேவர்கள் மற்றும் மனிதர்கள் அனைவரும் சிவபெருமானிடம் தலையிட்டு அசுரர்களை முடிவுக்குக் கொண்டுவருமாறு பிரார்த்தனை செய்தனர். சிவபெருமானும் பார்வதி தேவியும் முருகனைப் பெற்றெடுத்தனர் அவர் மிகவும் அழகான கடவுள்



மற்றும் தேவர்களின் தளபதி. பின்னர் முருகப்பெருமான் அசுரர்களுடன் போரிடத் தோன்றினார். சண்டை ஆறு நாட்கள் நீடித்தது, இறுதி நாளில், முருகனுக்கும் சூரபத்மனுக்கும் இடையே கடுமையான போர் நடந்தது. இறுதியாக, முருகப் பெருமான் சூரபத்மனின் உடலைத் தனது வேலால் துளைத்தார். திடீரென்று, சூரபத்மன் என்ற அசுரன் ஒரு பெரிய மாமரமாக மாறினான், ஆனால் முருகப் பெருமான் அந்த மரத்தை தனது வேலால் செங்குத்தாக இரண்டு துண்டுகளாக வெட்டினார். இரண்டு துண்டுகளும் மயில் மற்றும் சேவலாக மாறியது. முருகப்பெருமான் மயிலை தனது வாகனமாக எடுத்துக் கொண்டார், மேலும் சேவலுக்கு தனது கொடியில் இடம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு சூரசம்ஹாரம் என்று பிரபலமாக அறியப்படுகிறது.

### வெற்றி வேல்

சஷ்டி நாளில் நடைபெறும் பிரபலமான 'வெற்றிவேல்' மந்திரம், சூரபத்மன் என்ற அசுரனை கந்தன் வென்றதோடு தொடர்புடையது.

### கோயில்களில் சூரசம்ஹாரம்

தென்னிந்தியாவில் உள்ள முருகப்பெருமான் கோயில்களில் இந்த நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. திருச்செந்தூர் முருகன் கோவிலில் கந்த சஷ்டி மற்றும் சூரசம்ஹாரம் மிகவும் பிரபலமான சூரசம் ஹாரம் திருவிழா இங்கு நடைபெறுகிறது. திருச்செந்தூர் முருகன் கோயில் அசுரர்களை அழித்த முருகப்பெருமானின் தெய்வீக செயல் அன்று மீண்டும் நிகழ்த்தப்படுகிறது.

### திருச்செந்தூர் முருகன் கோயில்


திருச்செந்தூர் முருகன் கோயில் தமிழ்நாட்டின் ஆறு முக்கியமான கோயில்களில் ஒன்றாகும். இது அறுபடை வீடு கோயில்களில் இரண்டாவது வீடாகும். சூரபத்மன் என்ற அசுரனை அழித்த பிறகு, முருகர் தனது தந்தையான சிவனை வழிபட விரும்பினார். அவர் தெய்வீக கட்டிடக்கலைஞரான மாயனை அழைத்தார், அவர் தான் இந்த திருச்செந்தூர் கோயிலை கட்டினார். சூரசம்ஹாரம் அன்று திருச்செந்தூர் முருகன் கோயில் சூரசம்ஹாரம் நடைபெறும். கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு நள்ளிரவு சுமார் 1 மணிக்கு கோயில் திறக்கப்படும். அதிகாலை 1.30 மணிக்க சாமியின் விஸ்வரூப தரிசனத்தை பக்தர்கள் வழிபடலாம். பின்னர், அதிகாலை 2 மணிக்கு மூலவர் முருகன் மூர்த்திக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெறும். முருகனின் அறுபடை வீடான திருச்செந்தூரில் நடைபெறும். இருப்பினும் அறுபடை வீடுகளும், உலகெங்கிலும் உள்ள முருகன் கோயில்களிலும் கந்தசஷ்டி விரதத்திற்கான சிறப்பு பூஜைகளும், வழிபாடுகளும் நடைபெற உள்ளது.

### முருகன் திருமணம்

மறுநாள் தேவசேனாவுடன் திருக்கல்யாணம் திருவிழா முடிவடைகிறது .

# செல்வம் பெருக வழிமுறைகள்

1. காலையில் எழுந்தவுடன் உள்ளங்கைகளை தான் பார்க்கவேண்டும்.
2.குளித்தபின்பு முதுகைத்தான் முதலில் துடைக்கவேண்டும். பின்புதான், முகத்தை துடைக்கவேண்டும். குளித்தவுடன் துவட்டும் போது முதலில் மூதேவி தான் உடலில் இடம் பிடிப்பாள். பின்தான் லட்சுமி வருவாள்.
3. பூஜைகளில் அல்லது கடவுளை வணங்கும் சமயத்தில் கைலிகள் என அழைக்கபடும் லுங்கிகள் அணியக்கூடாது.
4. சாப்பிடும் போது இடதுகை எப்போதும் வட்டிலைத் தொட்டுகொண்டுதான் இருக்கவேண்டும். வட்டிலை தட்டு என்று சொல்லகூடாது.அது தட்டு பாட்டுக்கு உரிய சொல்.
5.இரவில் தயிர் சேர்த்து கொள்ளக் கூடாது. அது விஷ்ணுவானாலும் சரி,அவரை விட்டு லட்சுமிகடாக்சம்



காணாமல் போய்விடும்.
6.பூஜை அறையில் அனைவரும் பழனியாண்டவர் படம் வைத்து இருப்போம். அதுவும் ராஜ அலங்காரம், அதில் சிலருக்கு ஆண்டியின் கோலமான கையேந்தும் வடிவம் இருக்கும். இதை எடுத்து விட்டு ராஜா கைவைத்து இருப்பது போல் வைக்கவேண்டும்.
7. வீட்டின் வாசலை பார்த்தவாறு ஏழுமலையான் (பெருமாள்)படம் வைக்க வேண்டும். இதை பல அலுவலகங்களில் வைத்திருப்பதை நாம் இன்றும் காண முடியும்.
8. மகா சொர்ணாகர்ஷண பைரவர் படத்தையும், ஐஸ்வரேஸ்வரர் படத்தையும் கட்டாயம் வைக்கவேண்டும்.
9.படத்திற்கும் கல்லா பெட்டிக்கும் அல்லது பீரோவிலும் மல்லிகை பூ கட்டாயம் வைக்க வேண்டும். மல்லிகை லட்சுமிக்கு விருப்பமான பூ.
10. பணத்தை ஒருவரிடம் கொடுக்கும்போது தலை பகுதி நம்மிடம் இருக்குமாறு கொடுக்கவேண்டும்.
11. திருவள்ளுவர் உருவம் பதித்த டாலர் அல்லது ஐந்து ரூபாய் நாணயம் பர்சில் வைத்திருக்க வேண்டும்.
12. லட்சுமி ,குபேரர் மந்திரங்களை நாள்தோறும் கூறவேண்டும், அல்லது மகான் திருமூலர் கூறியதுபோல "ஓம் ஐஸ்வரேஸ்வராய நம" என்றாவது கூறவேண்டும். இதை மல்லிகை பூ போடும் போது கட்டாயம் கூறவேண்டும்.
13.வீட்டின் முன்பு கண்திருஷ்டி படம் என்று கூறும் பூதம் படத்தை எடுத்துவிட்டு விநாயகர், முருகர் படங்களை மாட்டவும். அப்போது தான் தெய்வாம்சம் காணப்படும். அதை விடுத்து அரக்கர் படம் எல்லாம் மாட்டகூடாது. இது எதுவுமே செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை ஒரு நாளைக்கு ஒரு முறையாவது சித்தர் மந்திரம் கூறவும். அப்போதுதான் அருள்செல்வம் முதலில் வரும்.அப்புறம்தான் பொருள் செல்வம்.

ஓம் அகத்தீசாய நம!
ஓம் கரூவூர்தேவாய நம!
ஓம் போகதேவாய நம!
ஓம் கோரக்கதேவாய நம!.

## புதியதாகக் கட்டிய கோயில்களுக்குச் செல்வதால் முழுமையான பலனைப் பெற இயலுமா?

நிச்சயமாகப் பெற இயலும். பழமை வாய்ந்த ஆலயங்களில் மட்டும்தான் தெய்வீக சாந்நித்யம் இருக்கும் என்று கருதக் கூடாது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்பதே நிஜம். அதிலும் ஒரு ஆலயம் எழுப்புவது என்பது சாதாரணமான விஷயம் இல்லை. என்னதான் செல்வச்செழிப்பு உடையவராக இருந்தாலும் வெறும் பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு ஆலயத்தை எழுப்பிவிட இயலாது. இறைவனின் அருள் என்பது இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். தான் இந்த இடத்தில் குடியிருக்க வேண்டும் என்பதை அந்த தெய்வம்தான் தீர்மானிக்கும். அந்த தெய்வத்தின் ஆணைப்படியே ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆலயத்தை எழுப்ப இயலும். அப்படி புதியதாக கட்டப்பட்டிருக்கும் ஆலயமாக இருந்தாலும், அந்த இடத்தில் முறையாக பூஜைகள் என்பது நடந்துகொண்டிருக்கும் பட்சத்தில், நிச்சயமாக தெய்வ சாந்நித்யம் என்பது நிறைந்திருக்கும். அந்த ஆலயங்களுக்குச் செல்வதால் முழுமையான பலன் என்பதும் சர்வ நிச்சயமாகக் கிடைக்கும்.

## காஞ்சிபுரத்தில் உள்ள திவ்யதேசங்களின் பெயர்கள்

1 . வரதராஜ பெருமாள் கோயில் – திருக்கச்சி
2 . ஆதி கேசவ பெருமாள் (அஷ்டபுஜம் ) கோயில் –ஆட்டயபுரம்
3 . விளக்கொளி பெருமாள் கோயில் – தூப்பல்
4 . அழகிய சிங்கர் பெருமாள் கோயில் – திருவேளுக்கை
5 . திருநீரகத்தான் பெருமாள் கோயில் – திருநீரகம்
6 . பாண்டவதூதர் பெருமாள் கோயில் – திருபாடகம்
7 . நிலாத்துண்டர் பெருமாள் கோயில்– ஏகாம்பரேஸ்வரர் கோயில்
8 . உலகளந்த பெருமாள் கோயில் – திருஊரகம்
9 . திருகருணாகர பெருமாள் கோயில் – திருகாரகம்
10 . திருகார்வானர் பெருமாள் கோயில் – திருகார்வணம்
11 . சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் – திருவெஃகா
12 . கள்வப்பெருமாள் கோயில் – காமாட்சி அம்மன் கோயில்
13 . பவளவண்ணம் மற்றும் பச்சைவண்ணம் பெருமாள் கோயில்– காஞ்சி
14 . வைகுண்ட பெருமாள் கோயில் – திருபரமேஸ்வர விண்ணகரம்
15 . ஸ்ரீ விஜயராகவர் பெருமாள் கோயில் – திருப்புட்குழி

## மகா கந்த சஷ்டி விரதத்தின் வழிபாட்டின் முக்கியத்துவம் மற்றும் பலன்கள்:

முருகப் பெருமான் பக்தர்களுக்கு ஞான குருவாக இருந்து அருள்புரிகிறார். நல்ல குரு அமையவும், கல்வி மற்றும் ஞானம் பெருகவும் இந்த நாள் முக்கியமானது. செல்வ வளம் மற்றும் வருமானம். இந்த நாளில் முருகனை வழிபட்டால் நிறைந்த செல்வ வளம் மற்றும் நிலையான வருமானம் ஆகியவை கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

### எதிரிகள் விலகுதல்:

எதிரிகள் மற்றும் தடைகள் விலகவும், மனதில் நிம்மதி ஏற்படவும் இந்த நாள் வழிபாட்டிற்கு உகந்தது. இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி: இந்த மூன்று சக்திகளுக்கும் தலைவரான முருகப்பெருமானின் பேரருள் இந்த விரதத்தை முறையாக அனுஷ்டிப்போருக்குக் கிட்டும்.

### வழிபாட்டு முறைகள்

சட்கோண தீபம்: முருகனின் சட்கோண கோலத்தில் 'வ' எழுத்தின் மீது 3 விளக்குகளை ஏற்றி வழிபடலாம்.

### மந்திரம்/பதிகம்:

"ஓம் சரவண பவ" என்ற மந்திரத்தை 108 முறை ஜபிக்கலாம். திருப்புகழ் பாடல்களைப் பாடுவது சிறப்பானது. குறிப்பாக, ஞானத்தையும் செல்வத்தையும் தரும் பதிகங்களைப் பாடலாம். "உருவாய் அருவாய்..." எனத் தொடங்கும் முருகனின் புகழ்பெற்ற பாடலை மனமுருகப் பாடலாம்.

நைவேத்தியம் மற்றும் தானம்: முருகனுக்கு எலுமிச்சை சாதம் நைவேத்தியம் செய்து, அதனை எறும்புகள் அல்லது ஏழைகளுக்கு தானம் அளிப்பது சிறப்பான பலனைத் தரும்.

இந்த நாளில் முருகனை ஞான குருவாக நினைத்து வணங்கும்போது, வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் நீங்கி நிம்மதி, சந்தோஷம், ஆரோக்கியம் மற்றும் செல்வம் ஆகியவை பெருகும்.

## சபரிமலை தங்கத் தகடு கொள்ளை: 400 கிராம் தங்கம் மீட்பு

ஆந்திர மாநிலம் பெல்லாரியைச் சேர்ந்த நகை வியாபாரி கோவர்தனின் கடையில் இருந்து 400 கிராம் எடையுள்ள தங்க கட்டிகள் சிறப்பு புலனாய்வுக் குழுவால் மீட்பு. சபரிமலையில் இருந்து



திருடப்பட்ட தங்கத்தை உன்னிகிருஷ்ணன் போத்தி நகை வியாபாரி கோவர்தனிடம் விற்றது தெரிய வந்ததை தொடர்ந்து நடவடிக்கை

இது தவிர பத்தனம்திட்டா அருகே புலிமாத்தில் உள்ள உன்னிகிருஷ்ணன் போத்தியின் வீட்டிலிருந்து தங்க நாணயங்கள் மற்றும் இரண்டு லட்ச ரூபாய் ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டது.


CLASSIFIEDS

RENTAL

FLAT FOR RENT @ CHROMPET
CHAMBERS COLONY OPP . SARAVANA STORES
ARCHANA ASHRIVADH ENCLAVE
1-BHK 700 Sqft
SPINSTER/ BACHELOR
72004 75227

FLAT FOR RENT @ CHROMPET
BHARATHIPURAM
3BHK - 1450 sqft ,GROUNDFLOOR
BIKE PARKING - ONLY BRAHMINS
99405 63404

FLATS FOR RENTAL @ CHROMPET
AVAILABLE 2 BHK
PURE VEG
8072230451

FLAT RESALE

FLAT FOR RESALE @ CHITLAPAKKAM
BAGYALAKSHMI ST. Nr. BY SAIBABA TEMPLE
850 Sq.ft.2BHK UDS 382
EAST FACING
WITH CCP&LIFT
3YEARS OLD Rs.65L
NO BROKERS
81908 67758

FLAT FOR RESALE @CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS-412 Sqft 1ST FLOOR
@KRISHNA NAGAR
1182 Sqft 484 Sqft 1ST FLOOR
80722 30451

INDEPENDENT HOUSE

IND. HOUSE FOR SALE @NEHRU NAGAR
3 BHK

FLAT FOR RESALE @HASTHINAPURAM
3 BHK , 1900 Sqft
FIRST FLOOR, LIFT, CCP
80722 30451

IND HOUSE FOR SALE @ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
FLATS FOR SALE @ CHROMPET
1,2,3 BHK
AVAILABLE
80722 30451

BUILDING CONTRACT

HARIKRUPA CONSTRUCTION
→ CONSTRUCTION
→ INTERIOR
→ RENOVATIONS
→ PAINTING
94440 50507
98848 89904

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

GST ROAD NEWS
FOR ADVERTISMENT
DETAILS CONTACT
89395 26999 / 044-22236399


## முருகப்பெருமானுக்கு செய்யப்படும் அபிஷேகங்களின் பலன்கள்

**மஞ்சள் அபிஷேகம்:** நோய்களை அகற்றி ஆரோக்கியம் தரும் புனித மஞ்சள்.
**பால் அபிஷேகம்:** பக்தியின் தூய்மையையும் ஆன்ம சுத்தத்தையும் தரும் பால்.
**தயிர் அபிஷேகம்:** அமைதியும் வளமும் தரும் தயிர்.
**தேன் அபிஷேகம்:** இனிமையும் ஆனந்தமும் நிறைந்த தருணம்.
**நெய் அபிஷேகம்:** ஒளியும் ஆரோக்கியமும் தரும் நெய்.
**கரும்புச்சாறு அபிஷேகம்:** இனிய வாழ்வையும் வளத்தையும் குறிக்கும் கரும்புச்சாறு.
**இளநீர் அபிஷேகம்:** குளிர்ச்சியும் சாந்தியும் தரும் இளநீர்.
**பஞ்சாமிர்தம் அபிஷேகம்:** ஐந்து திரவங்களின் சங்கமம் பக்தியின் உன்னதம்.
**திருநீறு அபிஷேகம்:** ஆன்ம சுத்தமும் சிவபெருமானின் அருளும் தரும் விபூதி.

## கந்த சஷ்டிக்கு பழநி மலை முருகன் கோவிலுக்கு செல்லாத யானை

திண்டுக்கல் மாவட்டம் பழநி முருகன் கோயில் யானை கஸ்தூரி(58) ஆண்டு தோறும் கந்த சஷ்டி முதல் நாளில் பழநி மலைக்கு யானை பாதை வழியாக சென்று காப்பு கட்டி அங்கேயே 6 நாட்கள் தங்கி இருக்கும். சஷ்டி விழா நாட்களில் தங்க ரத புறப்பாட்டின் போது பங்கேற்கும் சூரசம்ஹாரம் நாளன்று மலையிலிருந்து யானை பாதை வழியாக கீழே இறங்கி கிரி விதியில்




சூரசம்ஹாரத்தில் பங்கேற்கும். அதன் பின் வெற்றி விழாவில் பங்கேற்க பெரியநாயகி அம்மன் கோயில் அருகே யானை தங்கும் இடத்திற்கு வந்து சேரும்.

இந்தாண்டு மழை பெய்து வருவதாலும், யானை வயது அதிகரித்த காரணத்தினாலும் மருத்துவரின் அறிவுறுத்தலின் படி மலை முருகன் கோயிலுக்கு யானை செல்ல வில்லை. கிரி வீதியில் நடக்கும் சூரசம்ஹாரத்தில் கோயில் யானை பங்கேற்கும்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3க்கு உட்பட்ட 39 வது வார்டில் திருமலை நகர் 14 வது தெரு மற்றும் 15வது தெருக்களில் நடைபெறும் புதிய கால்வாய் அமைக்கும் பணியை ஜெய பிரதீப் சந்திரன் ஆய்வு செய்தார் மற்றும் திருமலை நகர் 15வது தெருவில் இரண்டு கால்வாய்களை இணைக்க புதிய கல்வெட்டு அமைக்குமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் மேலும் இப்பணியை மழைக்கு முன்பே முடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

## கரூர் விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மாமல்லபுரத்தில் சந்திக்கும் விஜய்



தமிழக வெற்றி கழக தலைவர் நடிகர் விஜய் கரூர் நெரிசல் சம்பவத்திற்கு பிறகு வீட்டை விட்டு வெளியே வரவே இல்லை .ஒரு சில நாட்கள் மட்டும் பனையூர் அலுவலகத்திற்கு வந்து போனார். 40 நாட்களுக்கும் மேலாக வீட்டுக்குள்ளேயே முடங்கி கிடக்கிறார் கரூருக்கு சென்று நெரிசலில் சிக்கி பலியானவர்கள் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது

தற்போது 50 குடும்பத்தினரை மாமல்லபுரத்துக்கு வரவழைத்து அவர்களை தனித்தனியாக சந்திக்க இருப்பதாக தெரியவந்துள்ளது இதற்காக அங்குள்ள பிரபல ஓட்டலில் 50 அறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

ONLINE & OFFLINE TUTORING SESSIONS
FOR CLASS XI and XII ACCOUNTANCY OF CBSE, IGCSE & TN State Board SYLLABUS
AFTER SCHOOL HOURS TUITION FOR ALL SUBJECTS TILL 8 pm AT HOME
73050 62523







RAAJ INSTITUTE
B.E., B.Com., M.B.A., Diploma
School Tuition for 6th to 12th
8th Pass Directly Join 10th
10th Pass Directly Join +2
STATE / NIOS / CBSE
Spoken English & Hindi
Tally,MS Office,C,C++
No.75, Station Road, Radha Nagar, Chrompet
90032 67050

## மழைக்கால நோய்கள் டெங்கு கொசு கடிக்கும் நேரம்

தற்போது மழை காலம் தொடங்கிவிட்டது இதனால் டெங்கு உட்பட பல்வேறு நோய்கள் குழந்தைகளை தாக்குகின்றன இதுகுறித்து இந்திய குழந்தைகள் மருத்துவ அகாடமி தமிழ்நாடு குழுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரன் கூறும்போது, 'டெங்கு' பாதிப்பு ஏற்படுத்தும் கொசுக்கள் பெரும்பாலும் காலை 6 முதல் 8 மணி வரையும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையும் தான் கடிக்கும். குழந்தைகள் கை, கால்கள் முழுவதும் மூடும் வகையிலான ஆடைகளை அணிய வேண்டும். வீட்டின் சுற்றுப்புற பகுதிகளில் தேங்கி நிற்கும் தண்ணீரில் தான் கொசுக்கள் முட்டை வைக்கும். எனவே தண்ணீரை தேங்க விடத் கூடாது என்றார்

## டி.டி.எப் வாசன் நடிக்கும் திரைப்படம்

பிரபல யூடுபர் TTF வாசன் ஹீரோவாக நடித்து பான் இந்தியன் படமாக உருவாகி வரும் ஐபிஎல் படத்தின் டீசர் வெளியிடப் பட்டது.TTF வாசன் உடன் கிஷோர், அபிராமி உள்ளிட்டோரும் நடித்துள்ளனர்

## குலதெய்வ கோவிலில் நடிகர் அஜித்குமார் நெஞ்சில் பகவதி அம்மன் டாட்டூ

கேரள மாநிலம் பாலக்காடு அருகே "பெருவெம்பா" என்ற இடத்தில் மலபார் தேவசம் போர்டு கட்டுப்பாட்டில் "ஸ்ரீ ஊட்டுகுளங்கரா பகவதி அம்மன் கோவில்" உள்ளது.

இந்த கோவிலில் நடிகர் அஜித்குமார், மனைவி, மகனுடன் வழிபாடு செய்தார்.

இது அஜித்தின் குல தெய்வ கோவில் ஆகும். கோவிலுக்கு வந்திருந்த போது அவரது மார்பில் இடம்பெற்றிருந்த "பகவதி அம்மன்" டாட்டூ இப்போது பேசு பொருளாகி இருக்கிறது.



## குழந்தைகளின் காது, மூக்கு, தொண்டை பிரச்சனைகள்: கவனிக்க வேண்டியவை என்ன?

குழந்தைகளை பொறுத்த வரை, காது, மூக்கு, மற்றும் தொண்டை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் அவர்களுடைய உடல்நலம் மற்றும் கற்றல் திறனில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். பள்ளி செல்லும் குழந்தைகள் இத்தகைய பாதிப்புகளால் அடிக்கடி பாதிக்கப்படுவதால், பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து இந்த பிரச்சனைகளில் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

குழந்தைகளுக்கு காது வலி ஏற்படுவது ஒரு பொதுவான பிரச்சனை. சளி பிடிக்கும்போது மூக்கின் பின் பகுதியில் உள்ள குழாய் அடைபட்டு, காதுக்கு செல்லும் பாதையில் தொற்று ஏற்பட்டு காது வலி ஏற்படலாம். எனவே, சளி பிடித்திருக்கும்




போது குழந்தைகள் காது வலி என்று சொன்னால், உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் சென்று பரிசோதிப்பது அவசியம்.

மேலும், அதிக ஒலி கொண்ட பட்டாசுகளை வெடிப்பது, காது சுத்தம் செய்யும் பட்ஸ்ஸை தவறாக பயன்படுத்துவது, சக குழந்தைகளுடன் சண்டையிடும் போது காதில் அடிபடுவது, அல்லது காதில் கட்டிகள் ஏற்படுவது போன்ற காரணங்களாலும் வலி ஏற்படலாம். பெற்றோர்கள் ஒருபோதும் காது வலிக்கு எண்ணெய் விடுவது போன்ற விஷயங்களை தவிர்க்க வேண்டும்.

குழந்தைகள் சில நேரங்களில் பழங்களின் கொட்டைகள், சிறிய நாணயங்கள் போன்ற பொருட்களை தவறுதலாக விழுங்கிவிடுவார்கள் அல்லது காது, மூக்கில் போட்டுக் கொள்வார்கள். இது உணவு குழாய் அல்லது மூச்சு குழாயில் அடைப்பை ஏற்படுத்தி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம். இது போன்ற சமயங்களில் உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிப்பது மிக முக்கியம். குழந்தைகளின் இ.என்.டி. பிரச்சனைகளைக் கண்டறிந்து, சரியான நேரத்தில் மருத்துவரை அணுகுவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் பெரிய சிக்கல்களை தவிர்க்கலாம்.

## சர்க்கரை நோய் வராமல் தடுக்க 7 கட்டளைகள்

சர்க்கரை ஆரம்ப நிலையில் உள்ள போது, சில முன்னேற்பாடுகளை கடைப்பிடித்தால் சர்க்கரை நோய் வராமல் தடுக்கலாம். இல்லாவிட்டால் 5 ஆண்டில் சர்க்கரை நோய் வந்து விடும். சர்க்கரை நோய் வராமல் தடுப்பது எளிது. வாரத்திற்கு குறைந்தபட்சம் 3 நாளாவது குறைந்தபட்சம் 30 நிமிடமாவது கையை வீசி, வேகமாக நடக்க வேண்டும். இதனால் உடலில் சேரும் சர்க்கரை குறையும். சிகரெட் குடிப்பவர்களுக்கு வழக்கமாக வரக்கூடிய நோய்கள் என்று சில இருந்தாலும், கூடுதலாக ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் சிகரெட் குடிப்பதை விட வேண்டும். பெரும்பாலானோர் மாலை முதல் இரவு வரை அமர்ந்து டி.வி. பார்க்கின்றனர். இதனால் உடலுக்கு உழைப்பு கிடைப்பதில்லை. அப் போது நொறுக்கு தீனி




உண்கின்றனர். இதனால் உடலுக்கு சர்க்கரை நோய் வரும். மாலை முழுவதும் விளையாட்டு என்று கடைப்பிடிக்க வேண்டும். நாம் சமையலுக்கு பயன்படுத்தும் எண்ணெய் வகைகள் ரத்தத்தில் சர்க்கரை அளவை கூட்டுகிறது. ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தக்கூடிய, நல்ல கொழுப்பை உருவாக்கக்கூடிய எக்ஸ்ட்ரா வர்ஜின் ஆலிவ் ஆயிலை சமையலுக்கு பயன்படுத்த வேண்டும். அல்லது எதாவதொரு வகையில் தினசரி 5 மில்லி ஆலிவ் ஆயில் உடலில் சேர்க்க வேண்டியது கட்டாயம். அரிசி, சர்க்கரை, உப்பு, மைதா, சாதம், தேங்காய், பால், தயிர் உள்ளிட்ட வெள்ளை உணவு பொருள்களை தவிர்க்க வேண்டும். பேக்கரியில் விற்கும் எல்லா பொருள்களும் சர்க்கரையை கூட்டக்கூடியது. அதையும் தவிர்க்க வேண்டும். மூன்று வேளை சாப்பிடுவதை 5 வேளையாக மாற்றி கொள்ள வேண்டும். 3 வேளை சாப்பிடும் அளவை 5 வேளைகளில் சாப்பிட வேண்டும். தினசரி 25 முதல் 30 கிராம் வெந்த யத்தை உணவின் மூலம் உடலில் சேர்க்க வேண்டும். அது சர்க்கரையின் அளவு கூடாமல் தடுக்கும். வால் நட், பாதாம் பருப்பு கொஞ்சம், நிறைய காய்கறிகள், பப்பாளி, ஆரஞ்சு, ஆப்பிள் ஆகிய பழங்கள் ஆகியவற்றை உணவில் சேர்க்க வேண்டும். இவையெல்லாம் கடைப்பிடித்தால் சர்க்கரை நோய் வராது. சர்க்கரை நோய் எந்த நிலையில் உள்ளது என்பதை கண்டறிந்து, அதற்கான ஆலோசனையும், சிகிச்சையும் பெறுவது முக்கியம்.

## கம்பு தயிர் சாதம்



தேவையான பொருட்கள்:

கம்பு – ஒரு கப்,பால் – ஒன்றரை கப், தயிர் – அரை கப், கேரட் – 1 (துருவியது) , கடுகு – கால் ஸ்பூன், உளுத்தம் பருப்பு – கால் ஸ்பூன், பச்சை மிளகாய் – 1 (பொடியாக நறுக்கியது), வர மிளகாய் – 2, இஞ்சி – ஒரு துண்டு (துருவியது), மாங்காய் ஒரு கப் (பொடியாக நறுக்கியது), பெருங்காயத்தூள் – கால் ஸ்பூன், எண்ணெய்தேவையான அளவு, உப்பு தேவையான அளவு, கறிவேப்பிலை – ஒரு கொத்து , மல்லித்தழை – சிறிது.

செய்யும் முறை:

முதலில் கம்புவை சுத்தம் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். சுத்தம் செய்த கம்பை மிக்ஸியில் போட்டு, ரவைப் பதத்துக்கு உடைத்துக் கொள்ளவேண்டும். இந்த உடைத்த கம்புடன் ஐந்து கப் தண்ணீர் சேர்த்து குக்கரில் மிதமான தீயில் வேக வைக்கவேண்டும். இது 4 முதல் 5 விசில் விட்டு, இறக்கி, பால் சேர்த்து நன்றாகக் கிளற வேண்டும். பின்னர் தாளிப்பு கடாயில் எண்ணெய் சேர்த்து சூடானவுடன், கடுகு, உளுத்தம்பருப்பு,பெருங் காயத்தூள், கறிவேப்பிலை ஆகியவை சேர்த்து தாளிக்க வேண்டும். அத்துடன் கறி வேப்பிலை, வர மிளகாய், பொடித்த பச்சை மிளகாய், துருவிய இஞ்சி என்பவற்றை சேர்த்து வதக்கி, கம்பு சாதத்தில் சேர்க்கவேண்டும் இறுதியில், உப்பு, பொடியாக நறுக்கிய மாங்காய், துருவிய கேரட், தயிர், தேவை யான அளவு சூடான தண்ணீர் சேர்த்து நன்றாக கிளற வேண்டும். தயிர் சாதம் இப்போது குழைவாகத்தான் இருக்கவேண்டும். எனவே நன்றாக கிளறிக்கொள்ள வேண்டும். பின்னர் இதன் மேலால் கொத்தமல்லித்தழை தூவினால் சுவையான கம்பு தயிர் சாதம் தயார். இந்த உணவு சர்க்கரை நோயாளிகளுக்கான ஆரோக்கிய உணவாகும்.

## தினமும் காலையில் செய்யும் உடற்பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள்...!!

காலை உடற்பயிற்சி நம்மை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும். இந்த உடற்பயிற்சியை நடை, நடனம், யோகா உடற்பயிற்சி என எதுவேண்டுமென்றாலும் செய்யலாம். இது தேவையான உடல் வளர்ச்சியை ஏற்படுத்தி, நமது உடலை நாள் முழுவதும் ஆரோக்கியத்துடனும் வைத்திருக்கிறது.

காலை பயிற்சி என்பது உங்கள் ஹார்மோன்களை தூண்டி உங்களை விழிப்பாகவும், புத்துணர்ச்சியுடனும், அலுப்பு மற்றும் தூக்க உணர்ச்சியை போக்கி புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. காலை பயிற்சி உங்கள் தோலையும், முகத்தையும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவுகிறது.

காலை உடற்பயிற்சி உடலை ஒரு கட்டுப்பட்டிற்குள்



வைத்திருக்க உதவுகிறது. உடற்பயிற்சிக்கு ஏற்றவாறு நமது உடல் சரியாகிக் கொள்ளும். காலையில் செய்யும் உடற்பயிற்சியும் இரவில் நல்ல தூக்கத்திற்கு உதவுகிறது.

காலை உடற்பயிற்சி செய்வதை வழக்கமாக கொண்டால், சீரான உணாவு உட்கொள்ளும் முறை என்பது இதன் மூலம் ஏற்படும் நன்மைகளில் ஒன்று செரிமானம் மற்றும் நல்ல உடல் செயல் பாட்டை ஏற்படுத்துகிறது.

உடற்பயிற்சி செய்வதால், உடல் முழுவதும் ரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இதனால் ரத்தத்துக்கு போதுமான ஆக்சிஜன் கிடைக்கிறது. தினசரி உடற்பயிற்சி செய்பவர்களுக்கு அடிபட்டு ரத்தம் வெளியேறினால், விரைவில் உறைந்து, மேலும் வெளியேறவிடாமல் தடுக்கப்படுகிறது.

காலை உடற்பயிற்சி, மூளையின் செயல்திறனுக்கு உதவுகிறது. இதனால், மூளையின் நியூரான்கள் தூண்டப் பட்டு நினைவுத்திறன் மேம்படும். 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நினைவுத்திறன் குறைபாட்டால் அல்சைமர் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான காலை உடற்பயிற்சி மூலம் அல்சைமரின் தாக்கம் குறையும்.

மனஅழுத்தத்தில் இருந்து விடுபட காலை உடற்பயிற்சி சிறந்தத் தீர்வாக விளங்குகிறது. காலை உடற்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், நடைப்பயிற்சி ஆகியவற்றால் மூளையில் உள்ள மகிழ்ச்சியைத் தூண்டும் ஹார்மோன்களான செரோடோனின், நோர் பினேப்ரைன், எண்டார்ஃபின், டோபமைன் ஆகியவை அதிகரிக்கின்றன. இதனால், நாள் முழுவதும் மனம் புத்துணர்ச்சி பெறுகிறது. முன் கோபம், படபடப்பு ஆகியவை கட்டுப்படுத்தப் படுன்கிறன.

காலை பொழுதே அனைவருக்கும் உடற் பயிற்சி செய்ய மிகவும் ஏதுவான நேரம். காலையில் உடற் பயிற்சி செய்வதால் அமைதி மற்றும் கவன சிதைவு போன்ற பிரச்சனைகள் இருக்காது.



குரோம்பேட்டை அதிமுக பகுதி செயலாளர் குரோம்பேட் எம்.கே. சதீஷ் தீபாவளியை முன்னிட்டு ஜி.எ.ஸ்டி. ரோடு நியூஸ் ஆசிரியர் கி.முருகானந்த ஆதித்தனை சந்தித்து பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம்.



குரோம்பேட்டை அஸ்தினாபுரம் ஆர்.பி.ரோட்டில் உள்ள சாஸ்தா மஹாலில் அஸ்தினாபுரம் மெட்ராஸ் அரிமா சங்கம் சார்பாக ஒரு நாள் சேவை திட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பயனாளிகளுக்கு பிளாஸ்டிக் பக்கெட், நிழல் குடை, அரிசி, புடவை, தண்ணீர் பாட்டில், படுக்கை விரிப்பு, ஸ்கூல் பேக் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தலைவர் பிரம்மநாயகம், செயலாளர் கே.ஹெச்.சங்கரநாராயணன், பொருளாளர் ஜெயக்குமார், ஆளுநர் மணிசேகர், இ.ராஜமாணிக்கம், கல்யாணசுந்தரம், ராதாகிருஷ்ணன், எம்.ஜெயபால் மற்றும் பலர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வழங்கினர்.

## வாசகர்களுக்கு அறிவிப்பு

குரோம்பேட்டை, தாம்பரம், பல்லாவரம், சேலையூர், என தனித்தனியாக 4 பதிப்பு களாக ஞாயிறு தோறும் இலவசபிரதியை வெளியிட்டு வரும் ஜி.எஸ்.டி.ரோடு நியூஸ் லட்சக்கணக்கான வாசகர்களைக் கொண்ட ஒரே உள்ளூர் வாரபத்திரிகை. இப்பொழுது வாசகர்களின் வேண்டுகோளை ஏற்று **whatsapp** சேனலை உருவாக்கி உள்ளது. இதில் அன்றாடம் நடக்கும் உள்ளூர் செய்திகள் மற்றும் மாநில செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள மற்றும் வாரந்தோறும் வெளிவரும் ஜி.எஸ்.டி.ரோடு நியூசின் இ.பேப்பர் மற்றும் சமூக வலைத்தளங்களை உள்ளடக்கிய பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ஜி.எஸ்.டி. ஆன்லைன் மீடியா **youtube** சேனல், **www.gstroadnews.com** என்ற இணையதளத்தின் மூலமாகவும் கண்டு களிக்கலாம் பார்த்து படித்துக் கொள்ள சேனலை பார்த்து பின் தொடருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகம்

## ரூ.5 கோடி நில மோசடி; சிட்லபாக்கம் பெண் கைது

சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் நில அபகரிப்பில் ஈடு பட்ட 2 முக்கிய குற்றவாளிகளை தனித்தனி வழக்குகளில் தேடி வந்தனர். ரூ.3 கோடி மதிப்பிலான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரித்ததாக கடந்த 2021ம் ஆண்டு முதல் சுமதி (வயது 49) என்ற பெண்ணை தேடி வந்தனர். சென்னை சிட்லப்பாக்கத்தை சேர்ந்த இவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற காவலில் அவரை போலீசார் சிறையில் அடைத்தனர்.இதே யில் பெண்கள் போன்று போலியான நில ஆவணங்களை தயாரிப்பதில் பலே கில்லாடியான ராகேஷ் (36) என்பவரையும் மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர் ரூ.2கோடி மதிப்பிலான நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் அபகரித்து மோசடி செய்த வழக்கில் போலீசாரிடம் சிக்காமல் தலைமறை வாக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கிய குற்றவா ளிகளான இவர்கள் 2 பேரை கைது செய்த மத்திய குற்றப்பிரிவு போலீசாருக்கு கமிஷனர் அருண் பாராட்டு தெரிவித்தார்.

## 18 நாள் தொடர்ச்சியாக டாஸில் தோற்ற இந்திய அணி

சிட்னியில் இன்று நடைபெற்று வரும் 3வது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா மீண்டும் டாஸில் வென்று முதலில் பேட் செய்ய முடிவெடுத்து ஆடிவருகிறது. டாஸைப் பொறுத்தவரை இந்திய அணிக்கு அதிர்ஷ்டமில்லை. இந்தப் போட்டியையும் சேர்த்து தொடர்ச்சியாக 18 ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி டாஸில் தோற்றுள்ளது.

## தமிழகத்திற்கு மழையை கொண்டு வரும் அழகு மலர் புயல்

வங்கக் கடலின் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம்ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 27ம் தேதி காலை தென்மேற்கு, மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் புயலாக வும் வலுவடையக்கூடும். புதிய புயலுக்கு 'மோன்தா' (Montha) என பெயரிடப்பட உள்ளது. இந்த பெயரை தாய்லாந்து நாடு பரிந்துரை செய்துள்ளது. இதற்குப் பொருள் 'அழகு மலர்' ஆகும். அரபிக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று வடக்கு, வட கிழக்கு திசையில் மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளை கடந்து செல்லக்கூடும். இதன் காரணமாக, இன்று முதல் 27ம் தேதி வரை ஒருசில இடங்களிலும், 28 முதல் 30ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

## நவ.4ஆம் தேதி 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு அட்டவணை வெளியீடு

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், தமிழ்நாடு மாநிலப் பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர் களுக்கான பொதுத் தேர்வு அட்டவணை நவம்பர் 4ஆம் தேதி வெளியிடப்படவிருக்கிறது.

## ஆஸ்திரேலிய வீராங்கனைகளுக்கு பாலியல் தொந்தரவு!

மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இந்தூருக்கு வந்த ஆஸ்திரேலிய வீராங்கனைகளுக்கு பாலியல் தொந்தரவு.
கடந்த வியாழனன்று (அக்.23) கஃபேவுக்கு செல்ல வெளியே வந்தபோது, இரு ஆஸ்திரேலிய வீராங்கனைகள் பாலியல் தொந்த ரவுக்கு உள்ளானதாக ஆஸி. கிரிக்கெட் அணி உறுதிப்படுத்தியுள்ள நிலையில், ஒருவர் கைது.




பல்லாவரம் சந்தையில் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரி ரமேஷ்பாபு உள்ளிட்ட 10 அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டனர். அப்பொழுது ஆவடி பகுதியை சார்ந்த ஐயப்பன் என்பவர் அமைத்திருந்த கடையில் காலாவதி ஆன பிஸ்கட் ,சாக்லேட், சேமியா நூடுல்ஸ் போன்ற பொருட்களை கைப்பற்றினர். பேக்கிங் செய்யப்பட்ட அரிசியும் கெட்டுப் போயிருந்தது. அனைத்தையும் பறிமுதல் செய்த அதிகாரிகள் விற்பனை செய்த ஆவடி பகுதியை சார்ந்த ஐயப்பன் என்பவரையும் பிஸ்கட், சேமியா, அரிசி, சாக்லேட் போன்ற 500 கிலோ எடை கொண்ட பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.

## கிரிக்கெட் இந்திய அணிக்கு ஆறுதல் வெற்றி

ஆஸி.,க்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி.
கடைசி ஒருநாள் போட்டியில் சதம் விளாசினார் இந்திய வீரர் ரோகித் சர்மா
இரு போட்டிகளில் டக் அவுட் ஆன இந்திய வீரர் விராட் கோலி முன்றாது ஒரு நாள் போட்டியில் அரைசதம் விளாசினார்




சிட்லபாக்கம் அம்பேத்கார் நகரில் கொசு புழு ஒழிப்பு விழிப்புணர்வு அளிக்கும் வகையில் மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன் தலைமையில் துப்புரவு அலுவலர் ஜனார்த்தனன், துப்புரவு ஆய்வாளர் தீபக், துப்புரவு மேற்பார்வையாளர் கார்மேகம் மற்றும் குமார் உள்ளிட்ட குழுவினர் மழைநீர் தேங்க கூடிய பிளாஸ்டிக் கவர்கள், கண்ணாடி பாட்டில்கள், லெதர் பைகள், தர்மாகோல், தேங்காய் சரடுகள் உள்பட சுமார் 1850 கிலோ குப்பை கழிவுகளை துப்புரவு பணியாளர்களின் உதவியோடு அகற்றினர். பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



மழையின் போது பல்லாவரம் ரேடியல் சாலையில் சென்று கொண்டிருந்த பழனிவேல் என்பவருக்கு சொந்தமான மணல் லாரி சிக்னலில் உள்ள வேகத்தடையில் ஏறி இறங்கியதும் பாரம் தாங்காமல் லாரியின் ஸ்பிரிங் பிளேட் உடைந்து விபத்து ஏற்பட்டது இதனால் டாரஸ் லாரி ஒருபுறம் சரிந்து வாகனம் நகர முடியாத நிலையில் நின்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஓட்டுநர் பொக்லைன் எந்திரம் மூலம் வாகனத்தின் ஒரு பகுதியில் ஜாக்கி மூலம் தூக்கி நிறுத்தினர்.




Published by **K.MURUGANANTHAM** Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: **K.MURUGANANTHAM.** RNI No. TNBIL / 2013 / 48725